REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர். அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

வட நாட்டவர் சுரண்டல்— கவர்னர் பிரகாசா தரும் சான்று!

"தென்னாட்டிலிருந்து அந்த நாட்களில், வடநாட்டுக்காரர்கள் ஏராளமான பணம் கொள்ளையிட்டுச் சென்றிருக்கிறார்களெனத் தெரிகிறது; எனவே, இன்று தென்னாட்டவர், வடநாட்டவர்மீது வெறுப்புணர்வு கொண்டிருக்கிறார்கள் என்பது காண எனக்குச் சற்றும் ஆச்சரியமேற்படவில்லை,"

—என்று, காசியைச் சேர்ந்த ஒரு 'சரித்திரபூர்வமான குடும்ப'த்திலிருந்துவரும் சென்னை கவர்னர் பிரகாசா, கோட்டை பொருட்காட்சியில் தனது மூதாதையருள் ஒருவரான கோபால்தாஸ் என்பவருக்கு நினைவுச் சின்னம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

மலர் 2] சென்னை: சித்திரை 3உ சனி (16—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 4உ ஞாயிறு (17—4—55) [இதழ் 261

அளவுகடந்த— அவசியமற்ற செலவால் ரூ. 30·85 லட்சம் அரோகரா!

1,750 ரூபாய் தினக் கட்டணத்தில் வழக்கறிஞர்!

ஒழுக்கல் காகித வீடுகளால் ரூ. 2,00,000 தொலைந்தது!

இந்திய பேரரசின் பணப் பொறுப்பு பற்றி தணிக்கைக் குழு

புது டில்லி, ஏப். 16—

"வெளிநாட்டுத் தொழில் நிலையம் ஒன்றிலிருந்து, முன்னதாகக் கட்டி முடிக்கப்பட்ட 1,000 குடிசைகளை, இந்தியப் பேரரசு ரூ. 2,00,000 விலை கொடுத்து வாங்கிற்று; அதுவுமன்றி, 6,000 கடின அட்டை விட்டுக் கூரையும் வாங்கப்பட்டது.

"குடிசைகளுடன் தரப்பட்ட உத்திரவாத பத்திரத்தில்' மூன்று மழைக் காலங்களை மேற்படி குடிசைகள் தாக்குப் பிடிக்குமெனவும், தவறும் பட்சத்தில், தரப்பட்ட குடிசைகளுக்கு பதில் குடிசைகள் இனமாகத் தருவதாகவும், அத் தொழிற்சாலை வாக்களித்திருந்தது.

"மாரிக் காலம் கழிந்ததும், 1949-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மேற்படி குடிசைகள் டெல்லியில் வந்து இறங்கின; அவைகளில் சில நிர்மாணிக்கப்பட்டன; அவைகள் அனைத்தும் மழையில் ஒழுக்கெடுத்தன.

"அதனால், 'அகதிகளின் குடியிருப்புக்கு அக்குடிசைகளை ஒதுக்குவது,' என்ற முன்னைய முடிவு கைவிடப்பட்டு விட்டது. இருந்தபோதிலும், 75 குடிசைகளை ரூ.20,000 செலவில் பழுதுபார்த்து, நிர்மாணித்து, அவைகளில் அகதிகள் குடியேற்றப்பட்டனர்."

"அகில இந்திய தொழில் நீதிமன்றத்தின் முடிவை எதிர்த்து, சுப்ரீம் கோர்ட்டில், குறிப்பிட்ட பாங்கி ஒன்றினால் தொடுக்கப்பட்ட வழக்கில், அரசாங்கச் சார்பில் வழக்காடுவதற்காக முன்கூட்டிப் பெற வேண்டிய அனுமதியைப் பெறாமலே, பெருந் தொகைச் செலவில்—அதாவது, நாள் ஒன்றுக்கு ரூ. 1,750 கொடுத்து, வழக்கறிஞர் ஒருவரை, இந்தியப் பேரரசின் தொழிலாளர் மந்திரி நியமித்துள்ளார். அரசாங்கத்தின் அளவு கடந்த செலவிற்கு மேற்குறித்துள்ளது ஒரு எடுத்துக்காட்டு."

—இத்தகவலை, இந்தியப் பேரரசின் 1951—52-ம் ஆண்டு செலவைத் தணிக்கை செய்த கணக்குத் தணிக்கைக் குழு தந்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் காணப்படுவது :—

"அளவு கடந்த செலவு—அவசியமற்றச் செலவு—எனப் பல விஷயங்களைச் சுட்டிக் காட்டி இருப்பதுடன், 'அவைகளைப் பதிவு செய்த முறையும் குறைபாடுடையது,' என எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

"17 இனங்களில், அந்த ஆண்டில் துணை மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றி இருப்பதற்கு அறவே அவசியம் கிடையாது," எனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

34 சிறு இனங்களில் ஏற்பட்டு விட்ட ஒழுங்கீனங்களை எடுத்துக் காட்டி, அதனால் ரூ 30.83 லட்சம் நஷ்டமாக இருப்பதாகக் குறித்துக் காட்டி இருக்கிறது.

இலண்டனிலுள்ள இந்திய ஹை கமிஷனர் அலுவலகத்திற்குத் தேவைப்படும் மரச் சாமான்களைக் கோள்முதல் செய்யும் வகையில், ஒப்புதல் புள்ளி கோராமலே வாங்கப்பட்டிருப்பதையும், வெளிநாட்டு இந்தியத் தூதுவராலயம் ஒன்றில் கள்ளச் 'சேக்' மூலம் பணம் பெற்றிருப்பதும், இந்திய டிராக்டர் சங்கத்திற்கு வேண்டிய இயந்திரச் சாமான் வாங்கின வகையையும், ஒழுங்கீன நடத்தைக்கு ஆதாரங்களாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

இருபதாயிரம் பத்திரிகை தொழிலாளருக்கு நோட்டீஸ்?

லண்டனில் தகராறும்—சமரசமும்!

லண்டன், ஏப். 14—

சடந்த 22 நாட்களாக, பல லண்டன் பத்திரிகைகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அதிகச் சம்பளம் கோரி வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்.

அவர்களுடைய கோரிக்கையை விசாரித்து அறிந்து நீதி வழங்க அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு, தொழிலாளர்களின் கோரிக்கையை அப்படியே ஒப்புக்கொள்ளாமல், ஓரளவிற்குச் சம்பள உயர்வை ஒப்புக்கொண்டு தீர்ப்பளித்தது.

அத்தீர்ப்பை பத்திரிகைச் சொந்தக்காரர்கள் ஒப்புக்கொண்டனர்; ஆனால் தொழிலாளர்களோ பிடிவாதமாக ஏற்க மறுத்துவிட்டனர்.

அதன் விளைவாக, பத்திரிகைச் சொந்தக்காரர்கள், தங்களிடம் வேலை செய்துவந்த சுமார் 20,000 தொழிலாளர்களுக்கு, 'விலகல்' அறிக்கைக் கொடுத்துவிட்டனர்.

விலகல் அறிக்கை தரப்படுவதற்கு முன் தொழிலாளர்களுக்கும்—பத்திரிகைச் சொந்தக்காரர்களுக்கும் இணக்கம் ஏற்படுவதற்காக சுமார் 14 மணி நேரம் பேச்சு நடைபெற்றுள்ளது.

20,000 தொழிலாளர்களுக்கு வேலையிலிருந்து விலகிக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்கள் வேலை இழக்க வேண்டி ஏற்படாது. உடனடியாக அவர்களை வேலைக்குத் திரும்பும்படி, அவர்களுடைய தொழிற் சங்கங்களுக்கு பத்திரிகை உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அவர்களுடைய எதிர்காலக் கூலியைப் பற்றி நிர்ணயிப்பதற்காக மீண்டும் பேச்சுத் துவக்கப்படுமெனவும், அம்முடிவு ஜூலை முதல் தேதியிலிருந்து செயலாற்றப்படுமெனவும் அவ்வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மலிந்துவரும் நிர்வாகஊழல்

'டிராக்டர்' பேர ஊழல் அம்பலம்

இந்தியப் பேரரசின் 'பெரும் போக்கு'!

"பொருட்களின் நியாயமான விலையைவிட அதிக விலையில் இவைகள் வாங்கப்பட்டிருக்கின்றன. இது, சர்க்கார் பொதுச் சொத்தை அனாவசியமாகக் கையாடப்பட்டிருக்கிறது என்பதையே எடுத்துக் காட்டுகிறது; இவ்வாறு அனாவசியச் செலவுகள் ஏற்பட்டுள்ளமையால் நிறுவனத்தின் வருடாந்திர நிலுவை ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கிறது. எடுக்கப்பட்டுள்ள கணக்கு விபரப்படி, 1949—50-ம் ஆண்டில் நிறுவனத்தின் நிலுவைப் பணமான ரூ. 40,06,000, 1952—53-ம் ஆண்டில் 1,13,00,0000 ரூபாயாக உயர்ந்துவிட்டிருக்கிறது; இதினின்றும், நிறுவனத்திற்குப் போதிய

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

கல்விச் சட்ட எதிர்ப்பின் எதிரொலி

குழந்தைகளை அமைச்சர் அச்சுறுத்துகிறார்

பிரிடாரியா, ஏப். 15—

பாண்டு கல்விச் சட்டத்தை எதிர்த்து தென்னாப்பிரிக்காவில் 16 பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 5,000 ஆப்பிரிக்க குழந்தைகள் பள்ளிகளை 'பகிஷ்காரம்' செய்து வருகிறார்களல்லவா?

அவர்களை அச்சுறுத்தும் வகையில், தென்னாப்பிரிக்க மந்திரியான வேர்வொயர்டு என்பவர் வரும் ஏப்ரல் 25-ந் தேதிக்குள் அந்த மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லாவிட்டால், அந்தப் பள்ளிகள் நிரந்தரமாகவே மூடப்பட்டுவிடும் என்று எச்சரித்திருக்கிறாராம்,

பல ஆண்டுகளுக்கு அந்த பள்ளிகள் மூடப்பட்டிருக்குமென்றும் அந்தப் பிரதேச கல்வி அபிவிருத்திக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள பணம், வேறு பகுதிகளில் வாழும் ஆப்பிரிக்கர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுமெனவும் பேசியிருக்கிறாராம்.

போபால் நவாப் மகள்

போபால் நவாபின் மகளான அபீதா சுல்தானா இளவரசி, பாகிஸ்தான் அமைச்சரவையில் இடம் பெறுவாரென செய்தி ஒன்றின் மூலம் தெரியவருகிறது.

நல்வாழ்வு பிறந்தது!

கல்கத்தா, ஏப். 15—

வங்க புத்தாண்டுப் பிறப்பு நாளான இன்று மேற்கு வங்கத்தில் கடந்த 162 ஆண்டுக் காலமாக இருந்துவந்த ஜமீன்தாரி முறை முடிவடைந்துள்ளது.

இந்த முறை 1793-ம் ஆண்டில் கார்ன்வாலிஸ் என்ற வெள்ளைக்கார கவர்னர்—ஜெனரல் காலத்தில் அமுலாக்கப்பட்டதாகும்.

இப்போது இம்முறை ஒழிக்கப்பட்டிருப்பதினால் 80 லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயப் பெருமக்கள் பலனடைவர் எனத் தெரிய வருகிறது.

பிரிட்டனில் பொதுத் தேர்தல்

லண்டன், ஏப். 15—

இங்கிலாந்து நாட்டில் மே 26-ந் தேதியன்று பொதுத் தேர்தல்கள் நடைபெறும் என பிரதமர் சர் அந்தோணி ஈடன் அறிவித்திருக்கிறார்.

★★

முதல் முயற்சி!

மாநில மாநாட்டிற்காக தி. மு. கழகம் 25 ஆயிரம் ரூபாய் பணம் திரட்டுவது என்ற பேரூர் தீர்மானத்தின்படி, சென்னையில், ஏப்ரல் 24-ந் தேதி மாலை, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில்,

புரட்சி நடிகர்,

M. G. இராமச்சந்திரன்

அவர்கள்

'ஆசை நினைவு'

எனும் நாடகத்தை நடத்தித் தர இசைந்துள்ளார்கள் என்பதைப் பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறோம். மாநில மாநாட்டுக்கு நிதி திரட்டும் முதல் முயற்சி இது; முதல் முயற்சி, நமக்கெல்லாம் பெருமை தரத்தக்கதாக, வெற்றிகரமாக அமைதல் வேண்டும்.

முதல் முயற்சியின் வெற்றியின் துணை கொண்டுதான், தொடர்ந்து பல காரியங்கள் நடந்தேற வேண்டியிருக்கிறது.

சென்னைத் தோழர்களிடம், முதல் முயற்சி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

பெருமைப்படத்தக்க விதமான வெற்றியைத் தேடித் தரும் பெரும் பொறுப்பு சென்னைத் தோழர்களுக்கு!

சென்னைத் தோழர்கள், வெற்றியைத் தேடித் தருவார்கள் என்ற நம்பிக்கை நாடெங்கும் இருக்கிறது!

தோழர்களே! இன்றிலிருந்தே பணியாற்ற வாருங்கள்!!

முதல் முயற்சி—ஏப்ரல் 24-ல்!

[குறிப்பு:—சென்னை 8—4—55 'நம் நாடு' இதழில் வெளியிடப்பெற்ற "முதல் முயற்சி' அறிவிப்பில் கண்டுள்ளபடி தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 'பகைவனின் காதலி' நாடகம் நடைபெறும், என்றிருப்பதற்குப் பதிலாக 'ஆசை நினைவு' நாடகம் என மாற்றிப் படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.—ஆ-ர்]

★★

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 16—4—'55 சனி

உலக்கை உணர்த்தும் உண்மை!

ஆலையில் தீட்டப்படும் அரிசியைக்காட்டிலும் கையினுல் குத்தப்படும் அரிசி எவ்வளவு உயர் சத்துக் கொண்டதாக இருந்தபோதிலும், கைக்குத்தலை ஒரு குடிசைத் தொழில் ஏற்பாடாகக் கொள்ளுவதும், அதைப் பெருக்கப் பார்ப்பதும் கூடாது—அது விரும்பத்தக்கதும் அல்ல—வெற்றி பெறவும் பெருது என, நாம் இதற்கு முன் எழுதியிருந்தோம். அதைத் தொடர்ந்தே உலக்கையை ஒரு குடிசைத்தொழில் சாதனமாகக்கொள்ள முன்வந்திருக்கும் சென்னை அரசாங்கத்தின் போக்கில் மறைந்து கிடக்கும் மற்ருெரு பயங்கர உண்மையை இன்று எழுதுகிறேம்.

அனைவருக்கும் உழைப்பு அளிக்கவும், அரைகுறையாக உழைப்பவர்களுக்கு முழு நேர உழைப்பளிக்கவும் தக்க ஏற்பாடு செய்வது ஒரு அரசாங்கத்தின் கடமையேயாகும். முழு நேர உழைப்பளிப்பது என்ற பெயரில், மக்களைச் செக்கடி மாடுகளாக மாற்றிவிடக் கூடாது. அப்போக்கைக் காலமும் ஏற்றுக்கொள்ளாது—மனிதப் பண்பும் ஒப்புக்கொள்ளாது.

மனிதனுடைய உழைக்கும் ஆற்றலை, இந்த இயந்திரத்தின் துணைகொண்டு பெருக்கியும், உழைக்கும் கால அளவைக் கணிசமாகக் குறைத்தும், பயனைப் பல மடங்கு கூட்டியும், பண்டங்களை மிகுதியாகச் சேமிப்பதைத்தான் அறிவுடையோர் விரும்புவர்—காலத்துக்கேற்ற தொழில் முறை என்ற சிறப்பும் இதற்குத்தான் பொருந்தும். கற்கால மனிதன் கண்ட தொழில் முறைக்கும், தற்கால மனிதன் கையாளும் தொழில் முறைக்கும் உள்ள அடிப்படை மாறுபாடும் இதுதான்.

இயந்திரத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தனது உடல் பலத்தை மட்டுமே முக்கியமாகக் கொண்டு உழைப்பதால் ஏற்படும் பயனைக்கொண்டு, ஒருவனும், அவனை நம்பிவாழும் மற்ற உயிர்களும், தேவையான அளவு உண்டு உயிர் வாழமுடியாது. உழைத்தும் பற்றுக் குறையில்தான் அவன் அவதிப்படவேண்டியவனுவான். இந்த மகத்தான உண்மையைத்தான், இயந்திர ஏற்பாட்டிற்கு முந்திய பொருளாதார அமைப்பு நமக்கு அறிவித்துக்கொண்டு இருக்கிறது. இதை மறுப்பவர், மனித வளர்ச்சியின் மூலத்தையே மறுப்பவர்களாவர்.

உலக்கை, இயந்திர யுகத்திற்கு முந்திய கட்டப் பொருளாதார நடவடிக்கையை உணர்த்துவதேயாகும்.

உலக்கையால், அறிவு வளர்ச்சி ஏற்படாது! சுகவாழ்வு கிட்டாது! நாகரிகம் உருப்பெருது! மனிதப் பண்பு வளராது! அவ்வளவும், பலவிதத் தாக்குதல்களுக்கிடையிலும் நசித்துவிடாது ஒளிவீசிவரும் மனித குல மதிப்பீடுகள் அனைத்தும், உலக்கை ஏற்பாட்டால், இனி மெள்ள மெள்ளச் சாகும்! மனித குல மதிப்பீடுகளைச் சாகடிக்க ஒரு ஐந்தாண்டுத் திட்டமா தேவை?

உலக்கைபிடித்த கரங்கள் பெரும்பாலான நமது கிராமப் பகுதிகளில் இப்பொழுது அறவே கிடையாது. உலக்கையும் கையுமாக உலாவும் இரண்டொரு நபர்களோ, நமது பூர்வக் குடிகளின் நிலையில் இன்னும் இருந்து வருகிருர்கள்!

அந்தோ பரிதாபம்! போஷாக்கான அரிசியைத் தரும் புனித கரங்களைக்கொண்டுள்ள மேனிகள், எரிக்கரைப் பனைகள்போல் கறுத்தும், மழைகாணு பயிர்போல் மெலிந்தும், கோரக் காட்சியாக இருந்து வருகின்றன! இக் கொடுங்காட்சியைப் பெருக்க சென்னை காங்கிரஸ் அரசாங்கம் உலக்கையை, நமது சிற்றூர்ப் பகுதிகளுக்குச் சிபாரிசு செய்கின்றது. உலக்கை வளர, புதிய அரிசி ஆலைகளைத் திறக்க அனுமதி கிடையாது எனவும் உத்தரவு இருக்கின்றது!

தென்னுடு—திராவிடம் உலக்கைப் பொருளாதாரத்துடன் இணைக்கப்படுகிறது!

புதிய அரிசி ஆலைகளுக்குத் தடை போடுகிறது!

ஆனல்! ஆனல்!!

வடக்கிலோ, அணு சக்தி ஆக்கம் பெறுகிறது!

மின்சாரம் பெருக்கப்படுகிறது!

உழவு, இயந்திரமயமாக்கப்படுகிறது!

எண்ணெய் சுத்திகரிப்பு, போட்டா போட்டியுடன் நடைபெறுகிறது!

கலஞசக்கிடந்த துறைமுகம் முதல்தரத் துறைமுகப் பட்டினமாக மாற்றி அமைக்கப் படுகிறது!

உருக்கு இரும்புத் தொழிற்சாலை—ஒன்றல்ல, இரண்டல்ல—நான்குக்குமேல் உருவாகி வருகின்றன!

செயற்கை உரம்—சிமெண்ட்—சர்க்கரை—இது போன்ற அனைத்துத் தொழில்களும் இயந்திரமயமாக்கப்பட்டு வருகின்றன!

மின்சார இயந்திரம்—ரயில் இயந்திரம்—எண்ணெய் இயந்திரம்—ஆகாய விமான இயந்திரம்—ஆகிய இயந்திரங்கள் அனைத்தையும் இமை மூடித் திறக்குமுன் நூறு நூறுகச் செய்து குவிக்கும் கன இயந்திரத் தொழிலுக்குத் தீவிர ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது!

ஆனல், சென்னை மண்டலத்தில் கொலு வீற்றிருக்கும் காங்கிரஸ் கனங்களோ, உலக்கை ஊர்வலம் நடத்துகின்றன!—உலக்கை உலா படிக்கின்றன! வேதனை விளைவிக்கும் வெட்கக்கேடு!

கைக் குத்தல் அரிசித் தொழிலை பெருக்கும் நினைப்புடன், புதிய அரிசி ஆலைகளுக்குத் தடை விதிப்பது குறித்தும் ஆராய்ந்து கண்டறிய அகில இந்தியக் குழு ஒன்று செயல்பட்டு வருகிறது.

சென்ற திங்கள் மத்தியில், அக்குழு சென்னை மாநிலத்திலும் சுற்றி வந்திருக்கிறது. அதன் முடிவு வெளியாகவில்லை, அதன் பணி இன்னமும் முடிவு பெருததால்.

அதன் முடிவு தெரிவதற்கு முன்னதாகவே, அவசர அவசரமாக, சென்னை அமைச்சர் குழு, உலக்கையை வெள்ளோட்டம் பார்க்கக் கிளம்பி விட்டது! ஏன் இந்த அவசரம்—துடிதுடிப்பு! குழுவின் முடிவு தெரிந்த பின்னர்தான், புது அரிசி ஆலைகளுக்குத் தடை விதிக்க முனைந்தால் என்ன?

குழு முடிவு வெளியாவதற்குள் அரிசி ஆலைகளுக்குத் தடை விதிக்க முடிவு கட்டி இருப்பதிலும், உலக்கை உலா பாடக் கிளம்பி இருப்பதிலும் தான், உலக்கையில் மறைந்து கிடக்கும் உண்மை அம்பலமாகிறது. என்ன அந்த உண்மை?

வடநாட்டில் ஏற்கனவே ஏராளமான தொழில் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன.

தொழில் திட்டங்கள் தொடங்கப்பட்டு, முடியுந் தருவாயிலும், அரைகுறையாகவும் இருந்து வருகின்றன.

மேலும் பல தொழில்கள் துவங்கப்படும் கட்டத்தில் இருக்கின்றன.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கனரக இயந்திரத் தொழில்கள் இடம்பெற இருக்கின்றன. இதைப் பண்டிதர் ஒளிவு மறைவு இன்றி வெளிப்படையாக விளம்பியும் உள்ளார்.

இவ்வளவு ஏற்பாடுகளுக்கும் பற்பலவிதமான இயந்திரங்கள் வேண்டும்.

அனைத்தும், பிரிட்டன்-அமெரிக்கா போன்ற வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்தாக வேண்டும். அவைகளைக் கொள்முதல் செய்ய, அந்தந்த நாட்டுச் செலாவணி நாணயங்கள் தேவைப்படுகின்றன.

நினைத்தபடி ஏராளமான இயந்திரங்களை வாங்குவது என்ருல், ஏராளமாக ஸ்டர்லிங் நாணயமும், டாலர் நாணயமும் தேவையாகின்றன.

அவ்வளவு ஏராளமாக பிறநாட்டுச் செலாவணிகளை ஈடு செய்வது என்பது இந்தியப் பேரரசின் சக்திக்கு மீறியதாகும்.

எனவே, அவசியமான இயந்திரங்கள், அவசியமற்ற இயந்திரங்கள் என பாகுபாடு செய்யவும், அரிசி ஆலைகளுக்குத் தேவைப்படும் இயந்திரத்தை அவசியமற்றது எனத் தீர்மானிக்கவும், தீர்மானித்தவண்ணம் அவைகள் கொள்முதலுக்கு அனுமதி மறுக்கவும் இந்தியப் பேரரசு முடிவு கட்டி விட்டது.

அம்முடிவை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென, இந்தியப் பேரரசு, சென்னை அரசாங்கத்திற்கு ஆணை பிறப்பித்திருக்கிறது.

எஜமான்சொல்படி நடந்துகொள்ள சென்னை அரசாங்கம், புதிய அரிசி ஆலைகளுக்கு அனுமதி மறுத்துவிட்டு, உலக்கை ஊர்வலம் நடத்துவதில் ஈடுபடக் கிளம்பியிருக்கிறது!

வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மனப்போக்கு அறிந்திருப்போர், நாம் எடுத்துக் காட்டியுள்ள உலக்கை உணர்த்தும் உண்மையை ஒப்புவர் என்பதில் ஐயமில்லை.

ஒப்ப மறுப்போர், அகில இந்தியக்குழுவின் சிபாரிசு வெளியாகுமுன், சென்னை அரசாங்கத்தின் உலக்கைக் காதலுக்குப்பொருத்தமான அறிவியல் விளக்கம் உரைத்திட வேண்டும். உரைப்பரோ? ஒருக்காலும் இல்லை!

பெண்கள் உரிமை காக்க சட்டத்தின் துணை நாடுவர்!

முகம்மது அலி இரண்டாம் திருமண எதிரொலி

பாகிஸ்தான் மகளிர் போர் முரசு!

"விவகாரத்திற்கு உதவாத ஒரு பிரச்சினையாயிருந்த பலதார மணம், இப்போது, இலட்சக்கணக்கான பாகிஸ்தான் பெண்களை அச்சுறுத்தும் பெரும் பிரச்சினையாகிவிட்டது. இரண்டாம் தாரம் மணந்துகொள்வதில் உயர்ந்த பதவி வகிப்போரிடைகூட வளர்ந்து வரும் மனப்போக்கைக் காணும்போது, பாகிஸ்தான் பெண்கள், தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள சட்டத்தின் துணையை நாடவேண்டியவர்களாயிருக்கின்றனர்,"

என்று, பாகிஸ்தானிலுள்ள ஒன்பது பிரபல பெண் சமூக சேவகிகள் பாக். பிரதமரின் இரண்டாம் திருமணத்தைக் கண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

கராச்சி, ஏப். 14—

பாக். பிரதமர் முகமது அலி, தமதுகாரியதரிசியாயிருந்த அலியா சாதி என்பவரை இம்மாதத் துவக்கத்தில் திருமணம் செய்துகொண்டது கராச்சி வர்த்தக, தொழில் பெண்கள் சங்கத்தின் கூட்டம் ஒன்றில் கண்டிக்கப் பட்டுள்ளது.

பொதுவாகவே பாகிஸ்தானில் வளர்ந்துவரும் பலதார மணமுறையைக் கண்டித்த அந்த சங்கம், குறிப்பாக, பாக். பிரதமர் போன்ற பெரும் பொறுப்பான பதவிகளில் வீற்றிருக்கும் பெருமக்கள், இரண்டாம் முறையாக திருமணம் செய்துகொள்வது மரியாதைக் குறைவான ஒரு உதாரணம் என்றும், அது வன்மையான கண்டனத்திற்குரியது என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

மேலும், முகமது அலியின் இரண்டாம் திருமணத்திற்கு உடந்தையாயிருந்து, மற்ருெரு பெண்ணின் இதயத்தில் துன்பத்தையும், துயரத்தையும் குடியேற்றி, பெண்ணினத்தைக் காட்டிக்கொடுத்து, கடமைகளை மறந்த அலியா சாதி என்ற அந்தப் பெண்ணைக் கண்டிப்பதாயும் நிறைவேற்றப்பட்டுள்ள அந்தத் தீர்மானம் கூறுகிறது.

பலதார மணத்திற்கு உடந்தையாயிருக்கும் எல்லா படித்த பெண்களையும் நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறேம் என்றும் அந்தத் தீர்மானம் கூறுகிறது.

கராச்சியிலிருந்து வெளிவரும் 'மிரர்' என்ற இதழின் ஆசிரியரான பேகம் ஜ்பனிசா ஹமீதுல்லா என்பவரின் தலைமையில் அந்தக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

இந்தி ஆதிக்கம் 'உருவம்' பெறுகிறது

கெர் தலைமையில் குழு உதயமாகிறது

பம்பாய், ஏப். 14—

இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஆக்குவதில் இதுவரை பெற்றுள்ள முன்னேற்றம் குறித்து ஆராயவும், தொடர்ந்து ஆட்சி மொழியாக நிலைபெறச் செய்வதற்கான சிபாரிசுகளைச் செய்யவும், பி. ஜி. கெர். தலைமையில் ஒரு குழு நியமிக்கப்படும் என்று தெரிகிறது.

இங்கிலாந்தில் இந்தியாவின் தூதுவராயிருந்த அவருடன் இன்னும் 14 உறுப்பினர்களும் நியமனம் பெறுவர் என்றும் தெரியவருகிறது.

குடியரசுத் தலைவர் சீக்கிரமே இந்த நியமனங்களை அறிவிப்பாராம்.

அந்த 14 அங்கத்தினர்களும், இந்தியாவின் அங்கீகரிக்கப்பட்ட 14 மொழிகளின் பிரதிநிதிகளாயுமிருப்பாராம்.

டாக்டர் ஜாகிர் உசேன், டாக்டர் எஸ். கே. சாட்டர்ஜி, டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் பண்டித பாலகிருஷ்ண சர்மா ஆகியோர் குழுவில் இடம் பெறுவர் என்று தெரிய வருகிறது.

குழுவின் தலைமை அலுவலகம் பம்பாயிலிருக்குமாம்.

'ஏக இந்தியா'வைச் சாடுவோர் தொகை வளருகிறது!

தொழில் துறையில் தென்னுடு 'பரிபூரணமாகப்' புறக்கணிக்கப்படுகிறது!

மக்கள் சபையில் ஏ. வி. தாமஸ்

கொச்சித் துறைமுகத்தை ஒரு கப்பல் கட்டும் கேந்திரத் தொழில் துறைமுகமாக உயர்த்த வேண்டுமென்று டெல்லி மக்கள் சபையில் கேட்கப்பட்டது.

இதனை வலியுறுத்திப் பேசிய ஏ. எம். தாமஸ், 'இந்தியாவிலேயே முதல்தரமான கப்பல் கட்டும் கேந்திர இடமாக மாற்றப்படுவதற்குக் கொச்சித் துறைமுகத்திற்கு சகல வசதிகளும் உண்டு,' என்று கூறினர்.

'புதுப் புதுத் தொழில் அபிவிருத்தித் திட்டங்களை சர்க்கார் ஆரம்பிக்கும்பொழுது தென்னுடு 'பரிபூரணமாக'ப் புறக்கணிக்கப் படுகிறது," என்றும், அவர் சபையில் கூறினர்.

மகா பஞ்சாப் மாநிலம் வேண்டுமாம்!

இமாசலப் பிரதேசம், பஞ்சாப், பெப்சு, டெல்லி ஆகியவைகள் அடங்கியிருக்க வேண்டுமாம்!

அமிர்தசரஸ், ஏப். 15—

'மகா பஞ்சாப்' மாநிலம் அமைக்கக் கோரி மாநில புனரமைப்புக் குழுவிடம், ஜன சங், இந்து மகா சபை, ராம் ராஜ்ய பரிஷத், ஆரிய சமாஜ், சனுதன தர்ம சபா, பெண்கள் மாநாடு, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், வியாபாரிகள், கல்வி நிபுணர்கள் ஆகியோரின் பிரதிநிதிகள் அறிக்கை ஒன்று தாக்கல் செய்தனர் என்று தெரிய வருகிறது.

சிரோமணி அகாலி தளம், மற்ற நிறுவனங்கள் எல்லாம் பஞ்சாப் மொழி பேசும் மாநிலம் அமைக்கக் கோரி அறிக்கை தந்துள்ளனர் என்று தெரியவருகிறது.

மகா பஞ்சாப் மாநிலம்—பெப்சு, பஞ்சாப், இமாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டுமெனக் கோரப்பட்டதாம்.

ராம் ராஜ்ய பரிஷத், 'டெல்லியும் மகா பஞ்சாபிற்குள் இருக்க வேண்டும்' எனக் கோரியதாம்!

சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டி, மற்றும் அகாலி தளத் தலைவரான மாஸ்டர் தாரா சிங், மாநில புனரமைப்புக் குழுவினரைச் சந்தித்து, 'பஞ்சாப் மொழி வழங்கும் மாநிலம் தேவை' என வற்புறுத்தினராம்.

இலங்கை வாழ் 'இந்தியர்'

குடியுரிமை கோருவோர்: இந்தியப் பேரரசு தரும் புள்ளி விவரம்

முன்னர், இந்தியப் பிரயாண அனுமதிப் பத்திரங்களைப் பெற்றிராத 8,163 நபர்கள் 1954-ம் ஆண்டில், இந்தியக் குடிஉரிமை கோரி, இந்திய அதிகாரியிடம் மனுச் செய்துகொண்டனர். அவர்களில், 5,618 நபர்களின் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன; இலங்கையில் தங்கியிருக்க விரும்பிய 4,068 நபர்களுக்கு இந்திய 'பாஸ்போர்ட்'டுகள் வழங்கப்பட்டன; இலங்கையை விட்டு வெளியேறிவிட விரும்பிய 1,550 நபர்களுக்கு அவசரகால இந்திய 'சர்ட்டிபிகேட்'டுகள் வழங்கப்பட்டன. பாக்கியுள்ள 2,545 நபர்களின் மனுக்கள் பரிசீலனைக்காகவும், பிறந்த தேதி, இடம் பற்றிய தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக இந்திய அதிகாரிகளிடம் விவரங் கேட்கப்படுவதற்காகவும், விண்ணப்ப நமூனுக்கள், விதிகளின்படி பூர்த்தி செய்யப்பட வேண்டியதற்காகவும் இன்னும் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன. 1954-ம் ஆண்டில், இந்தியக் குடி உரிமை அளிக்கப்படுவதற்கு மனுதாரர் அருகதை பெறத் தவறியது காரணத்திற்காக மனுக்கள் எதுவும் நிராகரிக்கப்படவில்லை.

1954 ஜனவரியிலிருந்து நவம்பர் மாதம் வரையுள்ள பதினொரு மாத காலத்தில் (அதிகார பூர்வமான தகவல்கள் கடைசியாக 1954 நவம்பர் மாதம் முடியக் கிடைத்துள்ளன) இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்களில், இலங்கைக் குடி உரிமைக்கு மனுச் செய்துகொண்ட 6,636 நபர்கள், இலங்கைக் குடிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்; மற்ற 41,548 நபர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. மனுச் செய்துகொள்ள வேண்டியதற்கான நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடைந்த 1951 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1954 நவம்பர் 30-ந் தேதிவரை, இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்களில் மொத்தம் 32,995 நபர்கள் இலங்கைக் குடிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்; அதிகார பூர்வமான புள்ளி விவரத் தகவல்களின்படி 97,344 நபர்களின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்குப்படி மொத்தம் 1,30,339 நபர்களின் மனுக்கள் பைசல் செய்யப்பட்டுள்ளன. இலங்கைக் குடி உரிமைக்கு மனுச் செய்து கொண்டவர்களின் மொத்த எண்ணிக்கை 8,00,000 ஆகும்.

மாநிலத் தலைநகர்கள் நிர்மாணம்

மத்திய சர்க்கார் அளித்த நிதி உதவி விவரம்

சந்திகார் தலைநகரத்தின் நிர்மாணத்துக்காக பஞ்சாப் மாநிலத்திற்கு 1953—54-ம் ஆண்டில் கடன் உதவியாக ரூ. 75 லட்சம் வழங்கப்பட்டது; 1954—55-ம் ஆண்டில் மேற்கொண்டு கடனாக ரூ 125 லட்சம் வழங்கப்பட்டது. இத்தொகைகளைத் தவிர, பஞ்சாப் சர்க்காரின் தலைநகர நிர்மாணத் திட்டத்துக்காக மத்திய புனர்வாழ்வுப்பு மந்திரி காரியாலயம், 1953—54-ம் ஆண்டு வரை 3 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறது.

ஒரிசாவுக்கும், தலைநகர நிர்மாணத்துக்காக 1948—49-லிருந்து 1952—53 வரை ரூ. 132 லட்சம் வழங்கப்பட்டது; நடப்பு ஆண்டில் மேற்கொண்டு ரூ. 50 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

கர்நூலில் ஆந்திர மாநிலத்தின் தற்காலிகத் தலைநகரமொன்றை நிர்மாணிப்பதற்காக, பிரிவாகாத முந்திய சென்னை மாநிலத்திற்கும் 1953—54ம் ஆண்டில் ரூ. 40 லட்சம் கடனாக வழங்கப்பட்டது.

கோரிக்கை வராத பிரச்சினையில் குழப்பம்

பாலாறு தண்ணீர் பற்றி மைசூர் மராமத்து மந்திரி

சென்னை மராமத்து அமைச்சரின் யோசனை சாத்தியமற்றதாம்!

"பாலாறு நதியின் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது பற்றிய பிரச்சினையில், நதியின் மேல் பாகத்தின் நீர்ப்பாசன வசதி ஏற்பாடுகள் பற்றி பரிசீலனை செய்ய சென்னை எஞ்சினியர்களை அனுமதிக்க வேண்டுமென்று சென்னை மராமத்து மந்திரி வெளியிட்ட யோசனை சாத்தியமற்றதாகும்," என்று மைசூர் மராமத்து மந்திரி ஓர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"இதுபற்றி எங்களுக்கு எவ்வித கோரிக்கையும் சென்னை சர்க்காரிடமிருந்து வரவில்லை," என்றும் அவர் கூறியுள்ளார்.

சபைத் தலைவர் மீது குற்றச்சாட்டு

பிகார் மந்திரி சபை மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானம்!

பாட்னா, ஏப் 14—

பீகார் மாநில சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் எஸ். கே. பேஜ் என்பவரால் கொண்டுவரப்பட்ட அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்ட சபை வாக்கெடுப்பின்போது தோற்கடிக்கப்பட்டிருக்கிறது.

முதலில், நம்பிக்கையில்லாத் தீர்மானம் பற்றிய விவாதம் நடைபெற்றதாம்.

மேலும் நான்கு நாட்களுக்கு இதுபற்றிய விவாதத்தை நீடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்த சட்ட சபைத் தலைவர் கிருஷ்ண சின்ஹாவின் 'பொறுக்க முடியாத மனப் போக்கினை'க் கண்டிக்கும் வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சபையைவிட்டு வெளியேறிவிட்டனர்.

'சபையில், சர்க்கார் மீது சுமத்தப்படும் பல்வேறு குற்றச்சாட்டுகளையும் கேட்டுக்கொண்டிருக்க முடியாது,' என்று சபைத் தலைவர் கூறியிருக்கிறார்.

'பிறருடைய நறுமெமையைச் சோதிக்கும் வகையில் தான் நடந்தது கிடையாது,' என்று சபைத் தலைவர் தம்மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டை மறுத்திருக்கிறார்.

நைரோபியில் இந்தியர்மீது தாக்குதல்

மாவ் - மாவ் இயக்கத்தினர் செய்கைதானும்!

நைரோபி, ஏப். 14—

இங்குள்ள இரண்டு சீக்கியர்களை மாவ் மாவ் இயக்கத்தவர் கத்தியினால் தாக்கி, படுகாயப்படுத்தினதாகத் தெரியவருகிறது.

படுகாயமுற்ற 45 வயதுடைய குருதயால் எனும் சீக்கிய தச்சு வேலைத் தொழிலாளி ஒருவர் மரணமடைந்ததாயும், மற்றொருவரான 25 வயதுடைய ஹசாரா சிங் என்பவர் ஒருவாறு குணம் பெற்று வருவதாகவும் செய்தியொன்றின் மூலம் அறியக்கிடக்கிறது.

தற்போது இங்குள்ள சீக்கிய வகுப்பைச் சேர்ந்த அனைவரும் படுதொல்லைகளுக்குட்படுத்தப்பட்டு வருகிறார்களாம்.

கெனியா இராணுவத்தினருடன் சீக்கியர்கள் பெரும்பான்மையினர் கொண்டுள்ள தொடர்பினால், மாவ் மாவ் இயக்கத்தவருக்கு ஏற்பட்டுள்ள ஆத்திரமும், கோபமுமே இந்தச் செயல்களுக்குக் காரணம் என நம்பப்படுகிறதாம்.

'பெரிய மனிதர்' தோற்றத்தில் நாகரீகத் திருட்டு

நெருங்கிப் பழகுகையில் நேர்மையற்ற செயல்!

சங்கரநயினார் கோவில், ஏப். 13—

இரயில்வே பிரயாணிகளிடமும், மற்றும் பலரிடமும் பொருட்களைத் திருடிய பல திருட்டுக் குற்றங்களில் சம்மந்தப்பட்டவர் என்று கருதப்பட்ட சங்கரநயினார் கோவிலைச் சேர்ந்த ராமசுவாமி என்பவரது மகன் அய்யாதுரை, சென்னை குற்ற இலாகா இன்ஸ்பெக்டரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்

கைது செய்யப்பட்ட அவரது வீட்டில், திருடப்பட்டவை என்று கருதப்படும் பல தங்க நகைகள், சேலைகள், மற்றும் விலையுயர்ந்த பொருட்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியிருக்கின்றனர்.

மேற்படி நபர், மிக ஆடம்பரமாக உடுத்தி, பெரிய மனிதர் போல் தன்னைக் காட்டிக்கொண்டு, இரயில்வே நிலையங்களில் வண்டிகளுக்காகக் காத்துக் கிடக்கும் சில பிரயாணிகளிடம் மிக நெருங்கிப் பழகுவாராம்; அவர்களது அபிமானத்தைப் பெறுவதற்காக அவர்களுக்கு காப்பி அல்லது அதுபோன்ற மற்றவகை குடிபானங்கள் தருவாராம்; அவர் அவ்வாறு தரும் பானங்களில் ஒருவகையான மயக்க மருந்தைச் சத்தைக் கலந்துவிடுவதால் அதனை அருந்துவோர் சிறிது நேரத்திற்குள் மயக்கமுறுவராம். இச்சமயத்தில் அவர்களுடைய நகைகள், பணம், மற்றும் அவர்கள் கைவசமுள்ள பொருட்கள் ஆகியவற்றைத் திருடிச் செல்வாராம்.

தனிப்பட்ட முறையில் மட்டுமல்லாமல், அவரது தலைமையில் இப்படிப்பட்ட வகையான திருட்டுகளுக்கென ஒரு கூட்டமே உண்டென்றும் கூறப்படுகிறது.

இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த மற்ற திருடர்களையும் தேடுவதில் போலீசார் ஈடுபட்டுள்ளனராம்.

விக்கிரமாதித்தியன் பெயரிலா பல்கலைக் கழகம்?

மத்திய பாரத் சட்ட சபையில் 'டைய்'!

மசோதாவிற்கு திருத்தத்திற்குமேல் திருத்தமாம்!

குவாலியர், ஏப். 14—

மத்திய பாரத் மாநிலத்தில் புதியதாகத் துவக்கப்படவிருக்கும் பல்கலைக் கழகத்திற்கு என்ன பெயர் வைப்பது?—'விக்கிரம பல்கலைக் கழகம்' என்றா?—அல்லது 'மத்திய பாரத் விக்கிரம பல்கலைக் கழகம்' என்றா?—என்பது பற்றி ருசிகரமான சர்ச்சை நடைபெற்றிருக்கிறதாகத் தெரிகிறது.

சட்ட சபை நிறைவேற்றியுள்ள பல்கலைக் கழக மசோதாவின் 2-ம் பிரிவின் முதல் உட்பிரிவில் கண்டுள்ளபடி 'விக்கிரம பல்கலைக் கழகம்' என்று அழைப்பதா அல்லது, அதே மசோதாவின் திருத்தப்பட்ட முதல் பிரிவின்படி, 'மத்திய பாரத் விக்கிரம பல்கலைக் கழகம்' என்று அழைப்பதா என்பதே தகராறு.

மனோஹர் சிங் மேதா என்ற கல்வி மந்திரிக்கே இதில் தெளிவில்லையாம்!

சபைத் தலைவரான ஏ எஸ். பத்வர்தன் என்பவர், பாபுலால் மாளவியா என்ற காங்கிரஸ்காரர் கொண்டுவந்த முதல் பிரிவிற்கான முரண்பாடான திருத்தத்தைச் சரிப்படுத்தியிருக்கிறார்.

"இனி இந்தச் சட்டம், '1955ம் வருடத்திய மத்திய பாரத் பல்கலைக் கழகச் சட்டம்,' என்று அழைக்கப்படும்," என்று தலைவர் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்; மசோதாவின் வாசகங்களும் இனி அப்படியே அமையுமாம்.

மசோதாவின் இதர பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள 'விக்கிரம பல்கலைக் கழகம்' என்ற வாசகங்களை இந்தத் திருத்தம் பாதிக்காது. 'பல்கலைக் கழகம்' என்று பின்னால் கூறப்படும்போதெல்லாம் 'மத்திய பாரத் விக்கிரம பல்கலைக் கழகம்' என்றே பொருள்படும் என்றும் கூறப்படுகிறது.

பல்கலைக் கழகத்திற்கு, 'விக்கிரம பல்கலைக் கழகம்' என்றே பெயரிடப்படும் என்றாலும், நீதிமன்றத்தில், சபைத் தலைவரின் முடிவு சரிபார்க்கப்படுமானால், அங்கு 'மத்திய பாரத் விக்கிரம பல்கலைக் கழகம்' என்ற முடிவே கிடைக்கும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

சபையின் துணைத் தலைவரான காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வி. சர்வாதே, பல்கலைக் கழகத்திற்கு விக்கிரமாதித்திய அரசன் பெயர் வைக்கப்படுவதை பகிரங்கமாக சபையில் கண்டித்துப் பேசினார் எனத் தெரிகிறது.

குறை சொல்லுவோரைத் திருப்திப்படுத்துவதற்காக, காங்கிரஸ் கட்சியினர், பல்கலைக் கழகப் பெயரை மாற்றியமைக்க முடிவு செய்திருக்கின்றனராம்.

இப்போது, சட்ட சபைக்கும் உயர்ந்த அதிகாரமுடைய ஒரு சபையாரால், இப்பிரச்சினைக்குப் பரிகாரம் தேடப்படவேண்டியதாயுள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்ட அழைப்பு

★

அன்புடையீர்!

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் 24—4—55 ஞாயிறு காலை 10 மணிக்கு, சென்னை, வண்ணாரப்பேட்டை, தியாகராயர் கல்லூரியில் நடைபெறும்.

அதுபோது புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் பொதுக் குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகின்றேன்.

பொருள்:—

1. பொதுச்செயலாளர் தேர்தல்
2. மாநில மாநாட்டு வரவேற்புக் குழு அமைத்தல்

அன்பன்,

"அறிவகம்" சென்னை
14—4—55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

விலை வீழ்ச்சியைத் தடுப்பதில் பம்பாய் சர்க்கார் தீவிரம்

கோதுமையை விலைக்கு வாங்குகிறது

பம்பாய், ஏப். 14—

பம்பாய் மாநில சர்க்கார், கோதுமையின் விலை வீழ்ச்சியைத் தடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு மணங்கு ஒன்று 10 ரூபாய் வீதம் குறைந்தபட்ச விலையில் கோதுமையை விலைக்கு வாங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

பம்பாய் மாநிலத்திலிருக்கும் 10 மாவட்டத்திலுள்ள முக்கிய நகரங்களில் கோதுமை விலைக்கு எடுத்துக்கொள்ளப்படுமாம்.

வெள்ளைக் கோதுமை மட்டும் தான் இவ்வாறு விலைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும், சராசரி விலைக்குக் குறைவான ரகத்தைச் சேர்ந்த கோதுமை எடுத்துக் கொள்ளப்படமாட்டாதென்றும், அதுவும், நேரடியாகப் பயிரிடுவோரிடமிருந்துதான் பெற்றுக் கொள்ளப் படுமே தவிர, வர்த்தகர்களிடமிருந்தோ, அல்லது அவர்கள் மூலமாகவோ பெறப்பட மாட்டாதென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில், விலைவாசிகளின் வீழ்ச்சியைத் தடுக்க மத்திய சர்க்கார் கேட்டுக் கொண்டுள்ள யோசனைப்படியே, இது மேற்கொள்ளப்பட இருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

காட்டு குத்தகை தர ரூ. 2 லட்சம் லஞ்சம்?

அமைச்சர் மீது குற்றச்சாட்டு

"பீகார் மாநிலத்தில், ஷாஹாபத் எனும் மாவட்டத்திலுள்ள மலை ஒன்றை இரசாயன பொருட்கள் சம்மந்தமான ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்துவதற்காக பீகார் மாநில அமைச்சர் ஒருவர் ரூ 2 லட்சம் லஞ்சம் பெற்றார்; பின்னர் அவர், அந்தப் பணத்தை அங்குள்ள இந்தி மொழி தினசரி பத்திரிகை ஒன்றிற்குத் தந்தார்."

இவ்வாறு, பீகார் மாநில மந்திரி சபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் பிரரேபித்துப் பேசுகையில் குறிப்பிடப்பட்டது

மதிப்பிட இயலாத அணுச் சிதைவு சக்தி

தொழில், மருத்துவ வளர்ச்சியில் இணையற்ற நன்மைகள் ஏற்படும்

"தொழில் அபிவிருத்தித் துறையில் அணுச்சிதைவு சக்தியை பயன்படுத்துவதினால் ஏற்படக் கூடிய நன்மைகள் மதிப்பிட இயலாததாக இருக்கும்,"

என்று, பிரிட்டிஷ் அணுசக்தி குழுவின் உறுப்பினர் சர். ஜசன் ஸ்மெடி போர்டு, சென்னையில் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

"இங்கிலாந்தில், 12 அணுசக்தி உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது; 1955—1956-ம் ஆண்டிற்குள் 4 நிலையங்களும், மேலும் 5 ஆண்டு காலத்திற்குள் 8 நிலையங்களும் நிறுவப்படும்," என்றும் அவர் கூறினார்.

"இந்த அணுசக்தி உற்பத்தியின் காரணமாக 4 கோடி டன் நிலக்கரி மிச்சமாகும்; மருத்துவத்துறையில், பல்வேறு புற்றுநோய்களின் சிகிச்சைக்கு அணுசக்தியை உபயோகிக்கலாம்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

கள்ள நாணயக் கும்பல்!

மாநில வேறுபாடுகளை மறந்து வேலைசெய்கின்றனராம்

டில்லியில் ஏராளமான திருட்டு நாணயங்கள் படையெடுப்பாம்!

டில்லி, ஏப். 15—

கள்ள நாணயங்களைத் தயாரித்து புழக்கத்திற்கு அனுப்பும் குழுக்கள் டில்லியில் படையெடுத்துள்ளனவாம். இந்தக் குழுக்கள், பல மாநிலங்களையும் சேர்ந்த கூட்டுச் சேர்க்கைகளாம். இவர்களுக்கு ஆங்காங்கே தேவையான கையாட்களும், 'ஏஜெண்டு'களும் இருக்கிறார்களாம்.

இவர்கள், எட்டணா, நாலணா, இரண்டணா, ஓரணா போன்ற மிகக்குறைந்த செலாவணி நாணயங்களையே கள்ளத்தனமாகத் தயாரிக்கின்றனராம்!

இத்தகவல்களை டெல்லி போலீசார் வெளியிட்டிருக்கின்றனர்.

கள்ள நாணய மாற்றத்தில் ஈடுபட்டிருந்த 10 பேர்களை, கடந்த இரண்டுமாத காலத்தில் போலீசார் பிடித்திருப்பதுடன் எட்டு வழக்குகளும் தொடுத்துள்ளனராம்.

அண்மையில் நடத்திய சோதனையின்போது, போலீசார், 1,300 இரண்டணா, 51 ஓரணா, 20 நாலணா, 10 எட்டணா நாணயங்களைக் கைப்பற்றியுள்ளனராம்.

"நகரில் புழங்கிக்கொண்டிருக்கும் எண்ணற்ற கள்ள நாணயங்களில், ஒரு சிறு பகுதியே இது." என்று குற்ற இலாகா போலீஸ் அதிகாரியான அப்துல் ரஹ்மான் கான் கூறியிருக்கிறார்.

"போலீசார் தீவிரமான புலன் விசாரணையில் ஈடுபட்டிருந்தும் கூட, இந்தக் கள்ள நாணயத் தயாரிப்பாளர் எவரையும், இதுவரை கண்டுபிடிக்க இயலவில்லை," என்று அவர் கூறியிருக்கிறார்.

"சரோல்பாக், கிங்ஸ்வே காம்ப் பகுதி, திகார் முதலிய இடங்கள்தான், கள்ள நாணயத் தயாரிப்புக்குப் பிரதான இடங்களாயிருக்கின்றன," என்று போலீஸ் விசாரணை கூறுகிறதாம்.

"டெல்லியில் புழங்கும் கள்ள நாணயங்களில், 30 சதவிகிதம் மட்டுமே டெல்லியில் தயாரிக்கப்படுகின்றன," என்று போலீசார் புள்ளி விவரம் தருகின்றனர்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஏப். 16, 17: சேலம் — குறள் மாநாடு

18: திருச்செங்கோடு-திமுகழக பொதுக்கூட்டம்

19: திருத்தணி—உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் தமிழ் மன்றம்

மலிந்துவரும் நிர்வாக ஊழல்......

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

திட்டம் வகுக்கும் திறமை கிடையாது என்பது தெரிய வருகிறது,"

—என்று, மத்திய டிராக்டர் நிறுவனத்தார், டிராக்டர்களுக்கான சிறு உறுப்புகள், மற்றும் சாமான்கள் வாங்கியதால் ஏற்பட்டுள்ள ஊழல்களை 1953-ம் ஆண்டின் கணக்குத் தணிக்கை அறிக்கை வெளியிட்டுள்ளது.

டெல்லி மக்கள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் மேலும் காணப்படுவதாவது :—

"34 ஒழுங்கற்ற செயல்களால் ரூ. 30,83,000 கையாடல் செய்யப்பட்டிருக்கிறது."

"கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்குவதில் தாமதம் ஏற்பட்டதால் அபராதமாகக் கட்டியதிலும், கோணிப் பைகள் காணுமற் போனதிலும், உணவுத் தானியங்களைக் குறைவாக இறக்குமதி செய்ததிலும் மத்திய சர்க்கார் உணவு, விவசாய இலாகா மட்டும் ரூ. 22,41,000 பாழாக்கியுள்ளது."

ஆப்கனிஸ்தான் கொந்தளிப்பு

பாகிஸ்தான் நடவடிக்கை

கராச்சி, ஏப். 16—

பாகிஸ்தான் சர்க்கார் காபூலில் உள்ள தங்கள் தூதுவராலயத்தைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களையும், ஜலலாபாத், காண்டஹாரில் உள்ள தங்கள் தூதுவர்களையும் காலி செய்யுமாறு உத்தரவிட்டிருக்கின்றனராம்.

'ஆப்கனிஸ்தானில் நிலவும் குழப்பமான நிலையே இந்த உத்தரவிற்கான காரணம்,' என்று, உத்தியோக பூர்வமான அறிக்கை ஒன்று கூறுகிறது.

பாகிஸ்தானுக்கு திரும்பி வர விரும்பும் ஆப்கனிஸ்தானிலிருக்கும் இதர பாக். குடிமக்களுக்கும் வெளியேறுவதற்கான வசதிகளை பாக். சர்க்கார் அளித்துள்ளதாம்.

150 பேருக்கு அதிகம் கொண்ட தாய்மார்கள், குழந்தைகள் கொண்ட முதல் கூட்டம், காபூலை விட்டு, இன்றையத்தினம் பெஷாவருக்கு புறப்படுமெனத் தெரிகிறது

இந்தி வார இதழ் பறிமுதல்

சென்ற ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15-ந் தேதியன்று வெளியிடப்பெற்ற 'ஹலசில்' எனும் இந்தி வார வெளியீடு ஒன்றின் எல்லா பிரதிகளையும் இராஜஸ்தான் சர்க்கார் பறிமுதல் செய்திருக்கிறதாம்.

சில சமூகத்தவரிடையே மத சம்மந்தப்பட்ட வகையில் துவேஷ மனப்பான்மையை உண்டுபண்ணுவதாக அவ்வெளியீடு அமைந்திருந்ததாம்.

போர்க் காலப் பகைமை ஒழிகிறது!

சமாதான உடன்படிக்கை மலருகிறது!

ரஷ்யா — ஆஸ்டிரியா ஒப்பந்தம்

சோவியத் ரஷ்யா—ஆஸ்டிரியா ஆகிய இரு நாடுகளிடையேயும் எல்லா முக்கியமான பிரச்சினைகளிலும் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஆஸ்டிரியா நாட்டில் ரஷ்யா வசமுள்ள எண்ணெய் வயல்களையும், எண்ணெய் சுத்திகரிப்புச்சாலைகளையும், ஆஸ்டிரியாவுக்குத் திருப்பித்தர ரஷ்யா ஒப்புக்கொண்டிருக்கிறது; அதற்குப் பதிலாக, 'க்ரூட் ஆயில்' ரஷ்யா பெற்றுக்கொள்ளும் என்றும் தெரிகிறது.

சமாதான உடன்படிக்கை அமுலானவுடன் நான்கு வல்லரசுகளின் படைகள் ஆஸ்டிரியாவிலிருந்து வெளியேறிவிட வேண்டுமென்பதை ரஷ்யா ஒப்புக்கொண்டது; 1955 டிசம்பர் 31-ந் தேதிக்குள் இதனைச் செய்யவேண்டுமெனத் தெரிகிறது.

ஆஸ்டிரியா, தன் நாட்டின் எல்லைக்குள் எந்த அந்நிய நாட்டிற்கும் படைதளம் தராது; எந்த இராணுவக் கூட்டிலும் சேராது.

ரஷ்யாவில் சிறை வைக்கப்பட்டிருக்கும் எல்லா ஆஸ்டிரிய யுத்தக் கைதிகளையும், 'சிவிலியன்'களையும் ரஷ்யா விடுவிக்குமாம்.

ஒரு சமாதான உடன்படிக்கை ஏற்பாடானவுடன் கோர்னெவ்பர்க் என்ற இடத்தில் உள்ள ரஷ்யாவுக்குச் சொந்தமான ஒரு கப்பல் கம்பெனியையும், கப்பல் தளங்களையும் ஆஸ்டிரியாவுக்கு மாற்ற ரஷ்யா இணங்கியிருக்கிறது.

ஆஸ்டிரியாவுடன் ரஷ்யா இப்போது செய்து கொண்டுள்ள உடன்படிக்கையினால், ஆஸ்டிரியாவுடன் நான்கு வல்லரசுகள் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்வதற்கான சூழ்நிலை, இப்போது, வெகு சாதகமானதாக உள்ளதாக இருநாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

சரித்திரம் காணாத சம்பவம்!

உறுப்பினரல்லாத அந்நியர் மக்கள் சபையில் பிரவேசம்

புதுடில்லி, ஏப். 15—

இதுவரை மக்கள் சபை சரித்திரத்தில் இல்லாத சம்பவம் ஒன்று இன்று நடைபெற்றிருக்கிறது.

உறுப்பினரல்லாத யாரோ ஒரு அன்னியர், சபைக்குள் நுழைந்து சர்க்கார் தரப்பு இடம்வரையில் சென்றுவிட்ட சம்பவம்தான் அது.

தூய கதர் உடை, வெள்ளை பைஜாமா, காந்திக் குல்லாய், கையில் கனத்த 'வாக்கிங் ஸ்டிக்,' இவற்றுடன் அந்த மனிதர் சபைக்குள் நுழைந்து, உதவி உள்நாட்டு மந்திரி பி. என். தாத்தரிடம் சென்றுவிட்டாராம்.

சபைக் கூட்டத்திற்கு அப்போது தலைமை தாங்கிய சர்தார் உக்கும் சிங், 'இது மிகவும் அபாயகரமான ஒரு பிரச்சினை; உடனே அந்த மனிதர் வெளியேற்றப்பட வேண்டும்,' என்று உத்தரவிட்டிருக்கிறார்.

இந்த அந்நியரை முதலில் பார்த்த சர்தார் மார்சிங் சைகல் என்பவர்தான், அதுபற்றி தலைவருக்கு தகவல் தந்திருக்கிறார்.

பின்னர், அந்த மனிதர் வெளியேற்றப்பட்டாராம்.

உள்ளே வந்த அந்த மனிதர், தனக்குத் தெரிந்த யாரையோ தான் தேடுவது போலவும், 'தான் அங்கு வரக்கூடாது,' என்று கையசைத்த ஒரு உறுப்பினரிடம் 'தான் அங்கு வருவதிருல் தவறொன்றுமில்லை,' என்பதுபோல் சைகை காட்டியதாயும் கூறப்படுகிறது.

இதற்கு முன், அவர், சபையின் வாயிலிலிருந்த அதிகாரிகளிடம், தான் புதியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்றும், எனவே, தான் சபைக்குள் போவதாயும் அந்த மனிதர் கூறினராம்.

வாயில் காக்கும் அதிகாரிகள் முறையாக உள்ளே செல்லுமாறு அவரை திருப்பி அனுப்பியிருந்தும், அந்த மனிதர் எப்படி உள்ளே புகுந்தார் என்பது தெரியவில்லையாம்.

அந்த மனிதரைப் பற்றியும், அவரது மக்கள் சபை 'வருகை' பற்றியும் விசாரணை நடக்கிறதாம்.

கழகக் கூட்டங்கள்

★

மாயூரம்

கூறைநாடு ஆராயத் தெருவில்

17—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: வி. ஏ. பாண்டியன்

பேசுவோர்:

டி. கே. சீனுவாசன்

என். கிட்டப்பா

கே. எஸ். சௌந்தரராசன்

★

சென்னை

பெத்துநாய்க்கன்பேட்டை

காசி விசுவநாதர் கோயில் எதிரில்

18—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: சி. ஆர். பாலசுந்தரம்

பேசுவோர்:

என். வி. நடராசன்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

★

மேட்டூர் அணை

பொதுசன சேவா சங்க மைதானத்தில்

18—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: க. கு. சின்னசாமி

பேசுவோர்:

காஞ்சி கல்யாணசுந்தரம்

எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ.

ப. கண்ணன்

சிற்றுளி சுப்பிரமணியம்

★

வேலூர் (சேலம்)

வ. உ. சி. திடலில்

18—4—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: ஆர். முத்துசாமி

பேசுவோர்:

எஸ். முத்து

ஏ. ஆனைமுத்து

★

திருச்செங்கோடு

18—4—55 மாலை 6½ மணிக்கு

தலைவர்: டி. எஸ். தங்கவேல்

பேசுவோர்:

க. அன்பழகன்

திருமாறன்

★

இடையாத்தூர்

18—4—55 மாலை, தோழர் சக்திவேலன் தலைமையில், தோழர்கள் ஆ. மணி எழிலன், தமிழ்தாசன் ஆகியோர் பேசுவர்.

கலைக்கூடம்

17—4—55 காலை 10 மணிக்கு மேற்படி நிலையத்தில் (14-ஏ ஆண்டியப்பன் தெரு, வடசென்னை) தோழர் குப்பசாமி தலைமையில் 'புத்தாண்டு' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்

பெயர்சூட்டு விழா

18—4—55 காலை 8½ மணிக்கு மேட்டூர் அணை, கருமணற்கூடலில் தோழர் க. கு. சின்னுசாமியின் ஆண்மகவுக்கு பெயர்சூட்டு விழா, தோழர் எம் பி சுப்பிரமணியம், எம்.எல் ஏ., தலைமையில் நடைபெறும் தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், ப. கண்ணன், சிற்றுளி சுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துக் கூறுவர்.

கல்விக் கட்டணம் அதிகரிப்பு

மாணவர்கள் எதிர்ப்பு

கல்கத்தாவையும், நகரைச் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், தங்கள் கல்வி நிறுவனங்களில் கல்விச் சம்பளம் அதிகரிக்கப்படுவதை எதிர்த்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வகுப்புகளை விட்டு வெளியேறினர் என்று கூறப்படுகிறது.

மாணவர்கள் பின்னர் ஒரு இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டி, கல்வி நிறுவன அதிகாரிகளின் போக்கைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினராம்.

தமிழ் மொழியில் பிற மொழிக் கலைச் சொற்கள்!

கண்டுபிடிக்க குழு நியமிக்கலாம்

கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் கருத்து

சென்னை, ஏப். 15—

"தற்போதுள்ள பிற மொழிக் கலைச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை கண்டுபிடிக்க, சென்னை சர்க்கார், குழு ஒன்று நியமிக்கலாம்," என்று நிதி, கல்வி அமைச்சர் சுப்பிரமணியம் தெரிவித்திருக்கிறார்.

"கலைச்சொற்கள் அனைத்துக்கும் சரியான தமிழ்ப் பதங்கள் கிடைத்ததும், அது, சென்னை மாநில அரசாங்க, பல்கலைக் கழக போதனு மொழியாகத் தமிழ் ஆக்கப்படுவதற்கான ஒரு ஆரம்பக் கட்டமாக்கப்படும்," என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சென்னை தமிழ் வளர்ச்சிக் கழகம் இதுவரையிலும் 25,000 கலைச் சொற்களுக்கு நேரிடையான தமிழ்ச் சொற்கள் பொறுக்கி எடுத்துள்ளதாம். ஒருமுறை உபயோகிக்கப்படுகிற ஒரு வார்த்தை—அது முற்றிலும் சரியானதாகவோ, அல்லது ஓரளவுக்கு சரியானதாகவோ இருந்தால், பின்னர் அச்சொல்லில் வேறு மாற்றங்களெதுவும் இருக்கக்கூடாது," என்று அமைச்சர் கூறினர்.

ஆட்சி நிர்வாகம், மற்றும் பல துறைகளிலும் பொருத்தமாக இருக்கக் கூடிய வகையில் தமிழ்க் கலைச் சொற்கள் கண்டுபிடிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின்கீழ், சர்க்காரால் அக்குழு நியமிக்கப்பட இருக்கிறது.

"தமிழில் தேவையான கலைச் சொற்கள் கண்டுபிடிக்கப்படாமலிருப்பது, சர்க்கார் மொழியாகவும், பல்கலைக் கழகங்கள் போதனு மொழியாகவும் தமிழ்மொழி ஆவதற்குத் தடையாக இருக்கிறது என்பதை தவிர்ப்பதில் இந்த ஏற்பாடு நல்ல பலனளிக்கக்கூடிய—முக்கியமான ஒன்றாகும்," என்றும் அமைச்சர் கூறினர்.

நல்ல தகவல்!

கராச்சி, ஏப். 15—

புதிய அரசியல் நிர்ணய சபை ஒன்றைக் கூட்டுவதற்கு பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் ஒரு பிரகடனம் வெளியிட்டுள்ளார். கிழக்கு பஞ்சாபிலிருக்கும் முர்ரீ என்ற இடத்தில் அந்த சபை கூடும். அதற்கு 53 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என்றும் அது ஆறு மாத காலம் பதவியிலிருக்கும் என்றும் தெரியவருகிறது.

பல்கேரிய அதிகாரியின் பரிதாப முடிவு

பம்பாய், ஏப். 15—

இந்தியாவில் உள்ள பல்கேரிய வர்த்தக தூதுவரின் செயலாளரான 30 வயதுடைய ஸ்வெட்காவ் என்பவர், தமது அலுவலகத்தில் 5-வது மாடி ஜன்னல் அல்லது 6-வது மாடியிலிருந்து குதித்திருக்க வேண்டும் என்றும், அதனால் அவர் மரணமுற்றிருக்க வேண்டுமென்றும் போலீசார் நம்புகின்றனராம்.

பரிசோதனைக்காக நகர மருத்துவ மனைக்கு அவரது உடல் அனுப்பப்பட்டுள்ளதாம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.